மரணதண்டனையை ஒழிப்போம்!

தொகுப்பு:
விடுதலை. க. இராசேந்திரன்

வெளியீடு:
பெரியார் திராவிடர் கழகம்
29, இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041

நூல் கிடைக்குமிடங்கள்

பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401
9786316155

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம்
காந்திபுரம் - கோவை
9843323153

பெரியார் படிப்பகம்
தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகம்
73 / 1 இலாயிட்ஸ் சாலை
சென்னை - 14
044.30228213

இராவணன் படிப்பகம்
இராதாகிருட்டிணன் நகர்
அரியாங்குப்பம்
புதுச்சேரி - 7
9443045614

பெரியார் புத்தக நிலையம்
மெக்டனால்டு சாலை, கண்டோன்மெண்ட்,
ஸ்டேட்பேங்க் மண்டல அலுவலகம் எதிரில்
திருச்சி - 620001
9865596940

நன்கொடை: ரூ.10.00

விமர்சனங்களை அனுப்ப - periyardk@gmail.com

மின் நூலாகத் தரவிறக்கம் செய்ய
www.periyardk.org

பதிப்பு ஆண்டு : 2011 ஆகஸ்ட் 15

தமிழ்நாடு அரசு தண்டனைக்குறைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும்!

மூவரின் மரணதண்டனையை நிறுத்தவேண்டும்!

தோழர் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் கருணை விண்ணப்பத்தை மத்தியஅரசு நிராகரித்து அவர்களுக்கு மரண தண்டனையை உறுதிசெய்திருக்கிறது.

உலகம் முழுவதும் மரணதண்டனை என்ற சட்டப் பிரிவினையே சட்டப்புத்தகத்திலிருந்து நீக்கிவிட வேண்டும் என்ற முழக்கம் ஓங்கி ஒலித்துவரும் இவ்வேளையில் மரணதண்டனை தொடர்பான சில செய்திகளை கருதிப்பார்க்கவேண்டும்.

உலகின் 193 நாடுகளில் 95 நாடுகள் மரண தண்டனை என்பதையே முழுமையாகக் கைவிட்டு விடப்பட்டுள்ளது. 8 நாடுகளில் போர்க்காலத் துரோகக் குற்றங்களுக்கு மட்டுமே என வைத்துள்ளனர்.

49 நாடுகள் சட்டத்தை வைத்திருந்தாலும் கடந்த 10 ஆண்டு களுக்கு மேலாக பயன்படுத்தாமல் உள்ளனர். வெறும் 41 நாடுகள் மட்டுமே சட்டத்திலும் பயன்பாட்டிலும் வைத்துள்ளன. அந்நாடுகளுள் இந்தியாவும் ஒன்று என்றாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 15 ஆண்டுகளுக்கு மேலாக யாருக்கும் அத் தண்டனை நிறைவேற்றப் படாமல்தான் உள்ளது.

1860 இல் இந்திய தண்டனைச்சட்டம் உருவாக்கப்பட்ட போது கொலை (302), மரணதண்டனை பெறும் அளவிலான பொய்சாட்சி (194) போன்ற குற்றங்களுக்கு சட்டப்படி மரணதண்டனை என எழுதப்பட்டது.

அதற்குப் பின்னால் 1956 இல் அவ்வகைக் குற்றங்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை ஏதேனும் ஒன்றை காரணங் களோடு வழங்கலாம் என்று ஒரு மாற்றம் வந்தது. ஆனாலும் மரண தண்டனையே அதிகமாக வழங்கப்பட்டுவந்தது.

அதன்பிறகு 1973 இல் மேற்கண்ட குற்றங்களுக்கு ஆயுள் தண்டனைதான் வழங்க வேண்டும் என்றும் விதிவிலக்கான வழக்கு களில் மரணதண்டனை விதிக்கலாம் என்ற மாற்றம் வந்தது.

1980 இல் பச்சான்சிங் வழக்கில் அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டும், அதுவும் அதன் சிறப்புத் தன்மையைப் பதிவுசெய்து விட்டுத்தான் மரணதண்டனை வழங்கப்படவேண்டும் என்ற மாற்றம் வந்தது.

இந்நிலையில் தேசத்தந்தை என காங்கிரசாரால் அழைக்கப் படும் காந்தி அவர்கள், கடவுள் கொடுத்த உயிரைப் பறிப்பதற்கு மனிதனுக்கு உரிமை இல்லை என்றும், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பது போன்ற காட்டுமிராண்டிகால நடைமுறை இந்த நாகரிகக் காலத்துக்குப் பொருந்தாது என்றும் தொடர்ச்சியாக கூறிவந்ததை நினைவில் கொள்ளவேண்டும்.

தண்டனையை உறுதிசெய்த உச்சநீதி மன்றம்கூட இதை ஒரு 'பழிவாங்கல்' என்று மட்டுமே கருத்துக் கூறுவதோடு, வேறு எவரையும் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் குற்றவாளிகளுக்கு இருக்க வில்லை என்றுகூறி, இதில் 'பயங்கரவாதம் இல்லை' என்கிறது. அதே சமயம் விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலான ஜார்ஜ் மவுண்ட்பேட்டன் 1979 இல் அயர்லாந்தில் கொலை செய்யப் பட்டபோது அக்கொலையில் நேரடியாக ஈடுபட்ட குற்றவாளி களுக்கே டப்ளின் நீதிமன்றத்தில் ஆயுள் தண்டனைதான் வழங்கப் பட்டது என்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும்.

பேரறிவாளன்உள்ளிட்ட மூவரும் குற்றமிழைத்ததாகவே வைத்துக்கொண்டாலும்கூட நேரடியாகக் கொலையை நிறைவேற்றிய வர்கள் இவர்கள் அல்ல. உதவி செய்தவர்கள் மட்டுமே. உச்சபட்ச தண்டனைக்குரியவர்கள் இறந்துவிட்ட நிலையில் உதவிசெய்ததாகக் கூறப்படும் இவர்களுக்கும் உச்சபட்ச தண்டனையை வழங்குவது நீதி அல்ல என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடியரசுத்தலைவர் கருணை மனுவை நிராகரித்த பிறகும் கேரள அரசின் உறுதியான வலியுறுத்தலால் சி.ஏ.பாலனின் மரணதண்டனை குறைக்கப்பட்ட நிகழ்வை முன்னுதாரணமாகக்கொண்டு தமிழக அரசு இந்திய அரசை வலியுறுத்த முடியும்.

இந்த நிலையில் இந்த இளைஞர்களுக்கு அரசியல் சட்டத்தின் 161 வது பிரிவு மாநிலஅரசுகளுக்கு வழங்கியுள்ள தண்டனைக் குறைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர்களை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்துவோம்.

மரண தண்டனை ஒழிப்போம்! மனிதநேயம் காப்போம்!

கொளத்தூர் மணி,
தலைவர், பெரியார் திராவிடர் கழகம்
15.08.2011

கேட்பது உயிர் பிச்சையல்ல! மறுக்கப்பட்ட நீதி!

தூக்குக் கொட்டடியிலிருந்து பேரறிவாளன் கடிதம்

தூக்குத் தண்டனையை எந்த நேரத்திலும் எதிர் நோக்கி யிருக்கும் பேரறிவாளன், சிறைக் கொட்டடியிலிருந்து குடும்பத்தினருக்கு எழுதியுள்ள கடிதத்தை தமிழினத்தின் முன் வைக்கிறோம்.

பேரன்புமிக்க அம்மா / அப்பா / சகோதர / சகோதரிகளே, வணக்கம். நான், அ.ஞா.பேரறிவாளன், இராசீவ் காந்தி கொலை வழக்கில் 19 வயதில் பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு அதன் விளைவாய் தூக்கு தண்டனை பெற்றவனாக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் இருந்து வருபவன். எள் முனையளவும் தொடர்பே இல்லாத வழக்கில் அரசியல் காழ்ப் புணர்ச்சியாலும், கேட்க நாதியற்றவன் என்பதாலும், அநீதியான தீர்ப்பை சுமந்து நிற்பவன்.

தந்தை பெரியாரின் கொள்கையால் நிரம்பிய குடும்ப வழி வந்தவன் என்பதால் மனிதநேயத்தின் அடிப்படையிலும், தொப்புள் கொடி உறவு என்பதால், இன உணர்வின் அடிப்படையிலும் சிங்கள இனவாதத்திற்கு எதிரான ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து அதற்காக தமிழக மண்ணில் அரசியல் செயல்பாடுகளை முன்னெடுத்தவன் என்ற காரணத்தால் என் மீது தவறான குற்றச்சாட்டு புனையப்பட்டது என்பதை தங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

19 வயது இளைஞனாய் கைது செய்யப்பட்டு, வாழ்வின் வசந்த காலங்களையெல்லாம் சிறையில் செய்யாத குற்றத்திற்காகத் தொலைத்து, இன்று 40 வயதுடன் பக்குவப்பட்ட குடிமகனாய் உங்கள் முன் இக்கடிதத்தின் மூலம் பேசுகிறேன்.

1. *திரு. இராசீவ் அவர்களின் கொலையை நியாயப்படுத்துவதல்ல இக்கடிதத்தின்நோக்கம்.மாறாக இக்குற்றத்திற்கு எவ்வித தொடர்பு மில்லாத நானும், என்னைப் போன்றவர்களும் மரண தண்டனைக்கு உரியவர்கள் அல்லர் என்று எடுத்துரைப்பது மட்டுமே.*

2. திரு. இராசீவ் கொலை விஷயமாக விசாரிக்க வேண்டும் என்று சொல்லி 11.06.1991 அன்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட நான் இன்று வரை நீதி மறுக்கப்பட்டு தூக்கு மரத்தின் நிழலிலேயே வாழ்ந்து வருகிறேன்.

3. அக்கொலைக்கு பயன்பட்ட 'பெல்ட் பாம்' செய்வதற்கு நான் உதவினேன் என்பதே என் தண்டனைக்கு வழி வகுத்தக் குற்றச்சாட்டு. இதற்கு ஏதுவாக ஊடகங்களில் பொய் செய்தி பரப்பப்பட்டது. 'இந்தியா டுடே' நாளிதழும் நான் எப்படி வெடிகுண்டு செய்தேன் என்று பொய்யாக ஒரு செய்முறை விளக்கம் வெளியிட் டிருந்தார்கள். ஆனால், "சி.பி.ஐ.யால் இறுதி வரை கண்டுப்பிடிக்க முடியாத கேள்விகளுள் ஒன்று, அந்த 'பெல்ட் பாம்'ஐ செய்தவர் யார் என்பதே" என்று இந்த வழக்கை விசாரித்த தலைமை புலனாய்வு அதிகாரி இரகோத்தமன் தான் ஓய்வு பெற்றவுடன் எழுதிய நூலிலும், பல்வேறு பேட்டிகளிலும் கூறியுள்ளார். ஆக விடைத் தெரியா கேள்விக்கு விடையாக நான் பலியிடப் படவேண்டுமா?

4. அந்த 'பெல்ட் பாமிற்கு' 9வி பேட்டரி வாங்கித் தந்தேன் என்பதின் மூலமே நான் அந்த 'பெல்ட் பாம்'ஐ செய்தேன் என வழக்குரைத்தனர் அரசு தரப்பு வழக்கறிஞர்கள். அதற்கு வசதியாக என்னுடைய மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியலில் பட்டய படிப்பும் இவர்களின் கதைக்கு கருவானது. ஆனால் வழக்கின் எந்தவொரு இடத்திலும் நான் வாங்கித்தந்த 9வி பேட்டரிதான் பெல்ட் பாம் வெடிக்கப் பயன்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லை.

5. உண்மை என்னவெனில் நான் 9வி பேட்டரியை வாங்கவுமில்லை, அதனை யாருக்கும் தரவு மில்லை. ஆனால் நான் 9வி பேட்டரி வாங்கினேன் என்பதற்கு வழக்கிலுள்ள ஒரே ஆதாரம், ஒரு பெட்டிக் கடைக்காரரின் சாட்சி தான். இந்த சாட்சியை ஏற்க முடியாது என்று தடா நீதிமன்றத்தில் கூறிய நீதிபதி பிறகு என்ன காரணத்தினாலோ இந்த சாட்சியை ஏற்றுக் கொண்டு விட்டார். நான் வாங்காத பேட்டரியை வாங்கினேன் என்று ஒருவர் மூலம் சொல்ல வைப்பது நம் காவல்துறைக்கு எத்தனை சுலபம் என்று சற்றே சிந்தியுங்கள்.

6. தடா சட்டத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டதே தவறு என்று உச்சநீதிமன்றம் இடித்துரைத்தது. காரணம் இந்தக் கொலைக்

குற்றவாளிகளுக்கு கொலை செய்யப்பட்டவர்களைத் தவிர யாதொருவரையும் அச்சுறுத்தவோ, கொல்வதோ நோக்கமாக இருந்திருக்கவில்லை என்று எடுத்துரைத்தது. அப்படி இருக்கும் வேளையில், எங்களை தடா சட்டத்தின் கீழ் கைது செய்து, உரிமைகள் மறுக்கப்பட்டு, தடா சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு, பெறப்பட்ட வாக்கு மூலம் மட்டும் எப்படி செல்லுபடியாகும்?

மேலும் நம் நாட்டில் வாக்கு மூலங்கள் எப்படிப் பெறப்படுகின்றன என்பதும் உங்களுக்கு நன்றாகவே தெரியும். கடுமையான சித்திரவதை, மிரட்டல், அடி உதைக்கு பயந்துதான் பல வாக்குமூலங்கள் ரத்தத்தால் கையெழுத்தா கின்றன. பொதுவாக அப்படிப் பெறப்படும் வாக்கு மூலங்களை மட்டுமே வைத்து நீதிமன்றங்கள் தீர்ப்பினை தருவது கிடையாது. ஆனால் **என் வழக்கில் மட்டும் நீதிமன்றம் அவ்வாக்குமூலத்தை மட்டுமே அடிப் படை யாகக் கொண்டு, வேறு எந்த ஆதாரமும் இல்லாமல் எனக்குத் தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது.**

7. ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த திரு. தியாகராஜன் என்ற அதிகாரி கேரள மாநிலத்தில் 1993 இல் நடைபெற்ற அருட்சகோதரி அபயா கொலை வழக்கை 'தற்கொலை' என முடிக்க அழுத்தம் கொடுத்தவர் என்பதும், அவரது முறைகேட்டை எதிர்த்ததால், அவருக்கு கீழ் பணிபுரிந்த துணை காவல் கண்காணிப்பாளர் திரு. தாமஸ் வர்கீஸ் என்பவர் தனது பதவியை துறந்தார் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பிறகு இந்த வழக்கு பாலியல் பலாத்காரம் மற்றும் கொலை என்று திரும்பியது. எர்ணாகுளம் தலைமை நீதிமன்ற நடுவர் 23.06.2000 அன்று அளித்த தீர்ப்பில் கடுமையான கண்டனங்களை வாங்கியவர் இந்த தியாகராஜன். **இவர் என்னிடம் வாங்கிய வாக்கு மூலங்கள் ஏன் உண்மையாக இருக்க வேண்டும்? யாருக்காகவோ வழக்கை எப்படியும் வளைப்பவர்கள் தானே இவர்கள்....**

8. தடா சட்டத்தில், சிறப்பு தனி நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டதால், பெரும் பான்மையான உரிமைகள் எனக்கு மறுக்கப் பட்டன. அதுவே என் தரப்பு நியாயங்களை எடுத்துக் கூற இயலாமற் செய்துவிட்டது. பொதுவாக ஒரு மாவட்ட நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு, உயர்நீதிமன்றம்,

பிறகு உச்சநீதிமன்றம் என்று இருமுறை மேல் முறையீடு செய்யும் வாய்ப்புள்ளது. இந்த செயலபாடு ஒரு இடத்தில் இல்லாவிட்டாலும் மறு இடத்தில் நீதி சரியாக கிடைக்க உதவியது. ஆனால் எங்கள் விஷயத்தில் தடா கொடுங்கோல் வழக்கு என்பதால், உயர்நீதிமன்றம் செல்லும் வாய்ப்பு மறுக்கப் பட்டு, இரண்டில் ஒரு மன்றத்தின் கதவு அடைக்கப்பட்டுப் போனது. இப்பொழுது தடா சட்டம் தவறு என்று அந்த சட்டமே நம் நாட்டில் வாபஸ் பெறப்பட்டாலும், அதனால் பாதிக்கப்பட்ட என் போன்றவர்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்? எப்பொழுது கிடைக்கும்?

9. தடா நீதிமன்றத்தின் கீழ் விசாரிக்கப்படுபவர்கள் 20 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என தடா சட்ட வரம்பு சொல்கிறது.

10. அவர் அதற்கு முன்னால் குற்றம் ஏதும் புரிந்தவரா என்பதை கவனிக்க வேண்டும்.

11. குற்றப் பின்னணி உள்ள குடும்பத்தைச் சார்ந்தவரா என்பதும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்கிறது தடா சட்டம்.

12. எனக்கு மட்டும் இந்த எந்த வரைமுறைகளையும் கடைபிடிக்காமல் தடாவின் கீழ் கைது செய்து விசாரித்து, தண்டனையும் அறிவித்தார்கள்.

13. சிறப்பு நீதிமன்றத்தில் 26 பேருக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட நிலையில் உச்சநீதிமன்றம் அதில் 22 பேர் தூக்குத் தண்டனையை ரத்து செய்கிறதென்றால், இவ்வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் எத்தன்மையுடன் ஒருதலைப்பட்சமாக, முன் முடிவுகளுடன் விசாரிக்கப்பட்டதென்பதை புரிந்து கெள்ள முடியும். சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று இருந்தாலும், இந்த வழக்கைப் பொறுத்தவரை கொல்லப்பட்டவர் இராசீவ் என்பதாலும், அவருக்கு இருந்த செல்வாக்கு மற்றும் ஊடக அனுகூலங்களாலும், ஒரு தலைபட்சமாகவே பார்க்கப்பட்டது. **இன்னொரு வாய்ப்பு கிடைக்கப் பெற்று, நடுநிலையுடன் விசாரிக்கப்பட்டால் எங்களது தூக்குக் கயிறும் கண்டிப்பாக அறுபடும் என்று என்னால் உறுதியாக கூற முடியும். அந்த வசதி இங்கிலாந்து உள்ளிட்ட மேலை நாடுகளில் உள்ளது. ஆனால் இனி**

வழக்கை விசாரிக்கும் வழியில்லை என்கிறது இந்திய குற்றவியல் சட்டம்... ஆகையால் கருணை மனுவின் மீதான முடிவே இறுதி முடிவு என்று விடப்பட்ட பரிதாபத்துக் குரியவர்கள் ஆகிப்போனோம் நாங்கள். **நான் நிரபராதி, நான் நிரபராதி என்று கத்திக் கொண்டிருக்கும் பொழுதே என் குரல் வளை தூக்குக் கயிற்றால் நசுக்கப்படுமோ?**

14. திருமதி சோனியா காந்தி, இவ்வழக்கில் தூக்குத் தண்டனைப் பெற்றவர்களுக்கு அத்தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் எனக்கோ என் குழந்தைகளுக்கோ (இராகுல் காந்தி, பிரியங்கா காந்தி) சற்றும் விருப்பமில்லை என ஏற்கனவே கூறியுள்ளார்.

15. ஆயினும் எங்களை 20 ஆண்டுகளாக இப்படி சிறையில் அடைத்து வைத்திருக்கும் மர்மம் எங்களுக்கு விளங்கவில்லை. நிரபராதிகளான எங்களை இப்படி தூக்குக் கொட்டடியிலேயே வைத்திருக்கும் காரணம் புரியவில்லை.

16. 1980களின் இறுதியில் வாழ்ந்த எல்லா இளைஞர்களைப் போலவே நானும் ஈழ விடுதலையிலும், விடுதலைப் போராளிகளின் மீதும் பற்றுக் கொண்டிருந்தேன். அன்று கல்லூரிகளிலும், பணி இடங்களிலும் எல்லோரும் தான் விடுதலைப் போராட்டத்திற்காக உதவி வந்தார்கள். ஒரு நாள் ஊதியத்தையும் கொடுத்தார்கள். பள்ளிகளில் நன்கொடை வசூலித்தார்கள். ஏன் நம் மத்திய மாநில அரசுகள் கூடத்தான் அவர்களுக்கு உதவிகள் புரிந்தன? ஒரு துர்ச் சம்பவம் நிகழும்பொழுது நான் மட்டும் எப்படி எதிரி ஆகிப் போனேன்?? ஏன் தனிமைப்படுத்தப்பட்டேன்?? உங்களில் ஒருவன் தானே நானும்??

தூக்குத் தண்டனை என்பது சட்டத்தின் பெயரால் செய்யப்படும் திட்டமிட்ட படுகொலை என்கிறார் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர்.

செய்த குற்றத்திற்கு வழங்கப்படும் தூக்கு தண்டனையையே திட்டமிட்டப் படுகொலையெனில், **செய்யாத குற்றத்திற்கு வழங்கப்படும் தூக்குத் தண்டனையை என்னவென்று சொல்வது?**

- முடிவுறா விசாரணையில், முடிவினை நோக்கித் தள்ளப்பட்டுள்ள அப்பாவி.

தமிழக முதல்வருக்கு
வி.ஆர்.கிருஷ்ணய்யர்
உருக்கமான கடிதம்

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குக் கயிற்றின் முன் நிற்கும் 3 தமிழர்களின் உயிரைக் காக்க முன் வரவேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், தமிழக முதல்வருக்கு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"இந்த மூன்று இளைஞர்களும் தூக்குத் தண்டனைக்கு உள்ளாகப் போகிறார்கள் என்ற செய்தி என்னை கண்ணீரில் மூழ்கச் செய்துவிட்டது. நாட்டின் உயர்ந்த நீதிமன்றம், இவர் களுக்கு தூக்குத் தண்டனை விதித்துள்ளது. இந்த இளைஞர் களுக்கு கருணை காட்ட வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். கடும் பாதிப்புக்குள்ளான சோனியாவும் கருணை காட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தார். இந்த மூவரின் உயிரைக் காப்பாற்ற நானும் பல வழியில் முயற்சித்தேன். எல்லா முறையீடுகளுமே நிராகரிக்கப் பட்டுள்ளன. இந்த நெருக்கடியான தருணத்தில், மனிதாபிமானத்தோடு, உள்ளார்ந்த கருணை உணர்வோடும் பெரும் உள்ளம் கொண்டு, இந்த மூன்று உயிர்களையும் காப்பாற்ற நீங்கள் முன்வர வேண்டும். இந்த நடவடிக்கையை நீங்கள் மேற்கொண்டால், உங்கள் ஆட்சியின் ஒளி மகுடம் பிரகாசிக்கும். உலகில் எங்கெல்லாம் தமிழினம் வாழ்கிறதோ, அவர்கள், உங்களின் மனிதாபிமான செயலை நன்றியுடன், வரவேற்பார்கள்"

- என்று வி.ஆர். கிருஷ்ணய்யர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அப்சல்குருவை தூக்கில் போட காங்கிரசில் எதிர்ப்பு

20 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பிறகும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்கள் அனுப்பப்பட்டு 11 ஆண்டுகளுக்குப் பிறகும் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை தூக்கிலிட வேண்டும் என்று துடிக்கிறது, காங்கிரஸ் ஆட்சி. 2005 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் தேதி, அப்போது உள்துறை அமைச்சராக சிவராஜ்பட்டீல் இருந்தபோது இம் மூவரின் கருணை மனுவை நிராகரிக்க லாம் என்று குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், குடியரசுத் தலைவர் பரிந்துரையை மறு பரிசீலனை செய்யுமாறு மீண்டும் உள்துறை அமைச்சகத்துக்கு திருப்பி அனுப்பிவிட்டார். மீண்டும் ப. சிதம்பரத்தின் உள்துறை அமைச்சகம், மூவரையும் தூக்கிலிட பரிந்துரைத்து, கடந்த மார்ச் 8, 2011 இல் குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டீலுக்கு அனுப்பி வைத்தது. உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை எற்று குடியரசுத் தலைவர் கருணை மனுக்களை இப்போது நிராகரித்துள்ளார். இந்த ஆண்டு மே மாதம் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தேவேந்திரபால் சிங், அசாம் மாநிலத்தைச் சார்ந்த மகேந்திரநாத் ஆகியோரின் கருணை மனுக்களை உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை ஏற்று, குடியரசுத் தலைவர் நிராகரித் துள்ளார். ஆனாலும், அவர்களின் தண்டனையை நிறைவேற்ற நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அப்சல் குருவுக்கு உச்சநீதிமன்றம் வழங்கிய தூக்குத் தண்டனையிலும், அவரது கருணை மனுவை குடியரசுத் தலைவர் இப்போது நிராகரித்துள்ளார். ஆனால், அப்சல் குருவுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று பாஜக, இந்துத்துவ சக்திகள் தொடர்ந்து பிடிவாதம் காட்டி வரும் நிலையில், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரைக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. காங்கிரஸ் கட்சியின் செயலாளரான பிரவீன்தவார் நடத் தும் காங்கிரசின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சுப்ரீம் சேவியர்' என்ற பத்திரிகை, குடியரசுத் தலைவர், இந்தப் பிரச்சினையில் உள்துறை அமைச்சகத்தின் கருத்தை ஏற்க வேண்டிய அவசியமில்லை என்று எழுதியுள்ளது. காங்கிரஸ் கட்சியின் பல மூத்த தலைவர்கள் அப்சல் குருவை தூக்கிலிடுவதற்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித் துள்ளனர். அப்சல் குருவை தூக்கிலிட்டால் ஜம்மு காஷ்மீரில் மோசமான எதிர்விளைவு களை உருவாக்கும் என்றும், உபி. சட்டமன்றத் தேர்தலில் சிறுபான்மையினர் எதிர்ப்பை காங்கிரஸ் சந்திக்க வேண்டி யிருக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

தூக்கிலிருந்து விடுதலை பெற்ற சி.ஏ.பாலன்

குடியரசுத் தலைவர் தூக்குத் தண்டனைக்கான கருணை மனுவை தள்ளுபடி செய்த பிறகு கேரளத்தில் சி.ஏ.பாலன் என்ற கம்யூனிஸ்ட் கட்சித் தோழர், தூக்கி லிருந்து விடுவிக்கப்பட்ட வரலாறும் உண்டு.

உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த வி.ஆர். கிருஷ்ணய்யர், நீதிபதியாவதற்கு முன் கேரளாவில் உள்துறை அமைச்சராக இருந்தார். அவரது சட்டப் போராட்டத்தினால் சி.ஏ.பாலன், தூக்குத் தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட்டார். இது பற்றி நீதிபதி கிருஷ்ண அய்யரே திருவனந்தபுரத்தில் நடந்த மரண தண்டனைக்கு எதிரான மாநாட்டைத் தொடங்கி வைத்தபோது பேசினார். அவரது உரையிலிருந்து:

“நீண்ட பல்லாண்டு முன்பு இந்தத் திருவனந்தபுரம் நகரத்தில் நான் உள்துறை அமைச்சராக இருந்தபோது... நாங்கள் பதவியேற்ற சிறிது காலத்திற்கெல்லாம் ஒரு வழக்கு என்னிடம் வந்தது. அவர் பெயர் சி.ஏ.பாலன் என்று நினைவு. அவருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டிருந்தது. நான் மரண தண்டனையை எதிர்ப்பவன். இந்த பாலன் முன்பே மாநில ஆளுநருக்கு வேண்டுகோள் விண்ணப்பம் அனுப்பியிருந்தார். அது மறுக்கப்பட்டது. பிறகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார். அதுவும் மறுக்கப்பட்டது. பிறகு தான் 1957 ஏப்ரலில் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். உள்துறை அமைச்சர் என்ற முறையில் என்னிடம் இந்த வழக்கு மறுபடியும் கொண்டு வரப்பட்டது. நான் சொன்னேன், இந்த மனிதரைத் தூக்கிலிடக்கூடாது. தூக்கைத் தூக்கிலிடு! இது என் உறுதியான நிலைப்பாடு.

உள்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் என்ற முறையில் நான் இந்த வழக்கை ஆளுநரின் பார்வைக்கு அனுப்பினேன். பாலனின் மரண தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்று எழுதி அனுப்பினேன். இதற்கிடையில் தில்லியிலிருந்து கடிதம் வந்தது. பாலனின் கருணை மனுவைக் குடியரசுத் தலைவர் முன்பே நிராகரித்து விட்டதால் ஆளுநர் இதனை மறுபரிசீலனை செய்ய முடியாது. அவருக்கு அந்த அதிகாரம் கிடையாது என்று!

மத்திய உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லப பந்த் எனக்கு எழுதினார். நான் அவருக்கு விடை எழுதினேன். வழக்கறிஞர், சட்டவியல் அறிஞர் என்ற முறையில் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஒருங்கே குடியரசுத் தலைவருக்கும், மாநில ஆளுநருக்கும் இந்த அதிகாரம் உள்ளது. ஆனால்இந்த அதிகாரம் இப்போதும் தீர்ந்து போய்விடவில்லை. மறுப்பதற்குப் பயன்படுத்திய அதே அதிகாரத்தை மறுபரிசீலனை செய்வதற்கும் பயன்படுத்த லாமே! தூக்குத் தண்டனையை நிறைவேற்றக் கூடாது என்று பரிந்துரைக்கும் அதிகாரம் உள்துறை அமைச்ச ராகிய எனக்குள்ளது. அந்தப் பரிந்துரையை ஆளுநர் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று வாதிட்டேன். இதையொட்டிப் பெரும் சர்ச்சை எழுந்தது. தூக்கிலிட ஆணையிடும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உரியது என்பதால் அதை ஆளுநர் மாற்ற முடியாது என்பதற்கு எம்.சி. சத்தல்வாடு என்ற சட்ட வல்லுநரின் கருத்து எனக்கு எடுத்துக் காட்டப் பட்டது. மாற்ற முடியும் என்பதற்கு நான் எங்கள் அரசின் தலைமை வழக்குரைஞர் கே.வி.சூர்ய நாராயணய்யாவின் கருத்தைப் பெற்று அனுப்பி வைத்தேன். இது பெரும் சட்ட மோதலும் அரசியல் மோதலும் ஆகிவிட்டது.

நான் இதில் விடாப்பிடியாக உள்ளேன் என்பதை சி.பி.பந்த் பார்த்தார். அன்று நான் இளைஞன், கட்டுக் கடங்காதவன், அவர் அதற்கு ஒரு தீர்வு கண்டார்.

சொன்னார்: கிருஷ்ணய்யர், நீங்கள் எங்கள் பெயரைக் காப்பாற்றுங்கள். நாங்கள் உங்கள் நோக்கத்தை நிறைவேற்றி வைக்கிறோம். மரண தண்டனையைக் குறைக்கும்படி நீங்கள் எனக்கு எழுதுங்கள். நான் அதனை என் பரிந்துரையோடு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கிறேன்.

இந்தப் பரிந்துரையை ஏற்றுச் செயல்படுவது தவிர குடியரசுத் தலைவருக்கு வேறு வழியில்லை. இப்படித்தான் உள்துறை, சட்டத்துறை அமைச்சர் என்ற முறையில் என் பதவிக் காலம் தொடங்கியது. குடியரசுத் தலைவரே தூக்கிலிட ஆணையிட்டுவிட்ட ஒருவரின் உயிரை, மரணப் பிடியிலிருந்து மீட்டுவர முடிந்தது. இது ஒரு வரலாற்றுப் பதிவு.

– ‘மாண்டொழிக மரணதண்டனை’ நூலிலிருந்து

முடிவுறாத விசாரணை

1. ராஜீவ் வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட வர்மா கமிசன் பாதியில் முடக்கப்பட்டது.
2. ஜெயின் கமிசன் அறிக்கையில் காங்கிரஸ்காரர்கள் ஒத்துழைக்க வில்லை என்ற அறிக்கையோடு நிறுத்தப்பட்டது.
3. மறு விசாரணை, வெளிப்படையாக நடைபெறுதல் அவசியம் என வலியுறுத்தப்பட்டும் அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை.
4. உலகம் முழுவதும் போற்றப்படும் முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் வீ.ஆர்.கிருஷ்ணய்யர், பேரறிவாளனின் மடலையும், வழக்கையும் படித்துவிட்டு, பேரறிவாளன் நிரபராதி என்று வலியுறுத்தியது மட்டுமல்லாமல் அவரை தண்டனை குறைப்பு செய்து உடனடியாக சிறையில் இருந்த காலங்களை கணக்கில் கொண்டு விடுதலை செய்ய வேண்டும் என அனைத்து முன்னாள் சனாதிபதிகளுக்கும், பிரதமருக்கும், சோனியா காந்திக்கும், இன்னாள் சனாதிபதிக்கும், பிரதமருக்கும் மேலும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருக்கும் தனிப்பட்ட முறையில் அழுத்தம் கொடுத்தார்.
5. முன்னாள் மத்திய சட்ட அமைச்சர் ராம்ஜெத் மலானி, இந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்களை விடுதலை செய்வதற்கான அனைத்து முகாந்திரங்களும் இருப்பதாக அவர் அமைச்சராக இருக்கும்போதே அறிவித்தார்.
6. முன்னாள் மும்பை உச்சநீதிமன்ற நீதிபதி எச்.சுரேஷ், பேரறிவாளனை தண்டனை குறைப்பு செய்து விடுதலை செய்ய அனைத்து தகுதிகளும் உள்ளதாக அறிவித்தார்.
7. சோனியா காந்தி, எனக்கோ என் மகனுக்கோ என் மகளுக்கோ இவர்களை தூக்கிலிடுவதில் விருப்ப மில்லை. உங்களிடம் (சனாதிபதியிடம்) கருணை மனு வரும்பொழுது இவர்களுக்கு தண்டனை குறைப்பு செய்வதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கடிதம் எழுதியிருக்கிறார்.
8. இந்த வழக்கைப் பயன்படுத்தி ஈழ விடுதலைப் போராட்டத்தை தடுத்து நிறுத்துவதும், இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த தமிழக மக்களை கடுமையாக அச்சுறுத்துவதுமே டில்லியின் நோக்கம்.

2 ஆண்டுகாலத்துக்கும் மேலாக நிறைவேற்றப்படாத தூக்குத் தண்டனைகளை ரத்து செய்த உச்சநீதிமன்றம்!

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பிறகு, நீண்டகாலம் அதை நிறைவேற்றாமல் தள்ளிப் போடுவது கூடுதல் தண்டனை வழங்குவதாகும் என்று கூறி பல வழக்குகளில் உச்சநீதிமன்றம், தூக்குத் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனையாக மாற்றியுள்ளது. இரண்டு ஆண்டுகாலம் தூக்குத் தண்டனை நிறை வேற்றப்படாவிட்டாலே அதை ரத்து செய்து விடலாம் என்று தீர்ப்புகள் வழங்கப்பட் டுள்ளன. கருணை மனு போடப்பட்டு 11 ஆண்டு காலத்துக்குப் பிறகு பேரறிவாளன், சாந்தன், முருகன் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாத நிலையில் இது தொடர் பாக உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள முக்கிய தீர்ப்புகளை தொகுத்துத் தந்துள்ளோம்:

ஜியான்சிங் எதிர் பஞ்சாப் அரசு

சீக்கியர்களின் 'அகாலிதள' கட்சித் தலைவர் ஹர்சந்த் சிங் லோங்கோவோல். சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் ஜியான் சிங் மற்றும் 6 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது. இதில் ஜியான் சிங் மீது மட்டும் உச்சநீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. ஏனைய 6 பேரும் விடுதலை செய்யப் பட்டனர். 'தடா' சட்டத்தின் கீழ் "குற்றவாளிகள்" விசாரிக்கப்பட்டனர். ஜியான் சிங் தூக்குத் தண்டனை விதித்த பிறகு, 13 ஆண்டு காலம் தண்டனை நிறை வேற்றப்படாமல் சிறையில் இருந்தார். தூக்குத் தண்டனை விதித்து நீண்டகாலம் ஒருவருக்கு தண்டனை நிறைவேற்றப்படாமல் வைத்திருப்பதை எதிர்த்து பாதிக்கப்பட்டவர் உச்சநீதிமன்றம் சென்றார். நீதிபதிகள் ஜி.பி. பட்நாய்க், கே.டி.தாமஸ், எஸ்.பி. குர்குதர் ஆகியோர் வழக்கை விசாரித்து தூக்குத் தண்டனையை ரத்து செய்தனர். தூக்குத் தண்டனையை ரத்து செய்தமைக்கு உச்சநீதிமன்றம் இரண்டு காரணங்களை முன் வைத்தது. ஒன்று 1985 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தற்காலிகமான தடா சட்டம் 1987 ஆம் ஆண்டில் காலாவதியாகி ஆகிவிட்டது. 'தடா' சட்டம் போன்ற தற்காலிகமான சட்டத்தின் கீழ் தரப்பட்ட தண்டனை அந்த சட்டம் காலாவதியாவதற்குள் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.

(Offences, committed against temporary Acts must be prosecuted and punished before the Act expires, and as soon as the Act expires any proceedings which are being taken against a person will ipso facto terminate)

உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டிய மற்றொரு காரணம், தண்டனை விதிக்கப்பட்ட பிறகு, அதை நிறைவேற்றுவதில் எடுத்துக் கொள்ளப்பட்ட நீண்டகாலதாமதம். எந்த ஒரு வழக்கிலும் தண்டனை பெறுகிற ஒருவர் எந்த சட்டத்தின் கீழ் தண்டனை தரப்பட்டாரோ அந்த சட்ட வரம்புக்கு அப்பால், கூடுதலாக தண்டனைகளை அனுபவிக்க முடியாது. இது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையாகும்.(சட்டப் பிரிவு 20(1)) ஒரு கைதியின் தண்டனையை குறைப்பதற்கு சட்டம் கொண்டு வருவதில் நியாயம் இருக்க முடியுமே தவிர, தண்டனையை அதிகரிக்கச் செய்ய முடியாது. இந்த வழக்கில் மரணதண்டனை விதித்த பிறகு ஒருவர் நீண்ட காலம் தண்டனை வழங்கப்படாமலே தண்டனையை சந்திக்கப் போகிறோம் என்ற மனநிலையில் 13 ஆண்டுகாலம் சிறையில் ***பாதிக்கப்பட்ட*** *நிலையில் இருந்திருக்கிறார். எனவே நாங்கள் தூக்குத் தண்டனையை ரத்து செய்து அதற்கு குறைவான தண்டனையான ஆயுள் தண்டனை விதிக்க வேண்டிய முடிவுக்கு வரவேண்டி யிருக்கிறது.*

(On the fact situation of this case and in view of the distance of time, particularly in view of the long. period of 13 years during which appellant was languishing in jail under the spell of death penalty. We are persuaded to award the lesser alternative i.e. imprisonment of life) (Judgment reported in 1999(9)SCC 312)

டி.வி. வேதீஸ்வரன் எதிர் தமிழ்நாடு வழக்கு

சுங்கத்துறை அதிகாரியென பொய்யாகக் கூறிக் கொண்டு, சென்னைக்கு வருவோரை, சோதனை யிடுவதற்காக அழைத்துச் சென்று, அவர்களை மயக்கமருந்து தந்து கொலை செய்து உடைமைகளைப் பறித்த வழக்கில் வேதீஸ்வரன் என்பவருக்கு தூக்கு தண்டனை தரப்பட்டது. தூக்குத் தண்டனை விதித்து 8 ஆண்டுகள் வரை நிறைவேற்றப்படாத நிலையில் பாதிக்கப்பட்டவர் உச்சநீதி மன்றத்தில், தனது தூக்குத் தண்டனையை ரத்து செய்யக் கோரி மனுத்தாக்கல் செய்தார். உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஓ. சின்னப்ப ரெட்டி மற்றும் ஆர்.பி. மிஸ்ரா ஆகியோர் மனுவை விசாரணைக்கு ஏற்று, தூக்கு தண்டனையை ரத்து செய்து 16.12.1983 அன்று உத்தரவிட்டனர்.

(Criminal Appeal No.75 of 1983 Arising Out of Special Leave Petition (Criminal) No.1276 of 1978) and Writ Petition (Crininal) No.17 of 1982)

நீதிபதி ஜெ. சின்னப்பரெட்டி இந்த மனுவில் பிறப்பித்த உத்தரவு மனித உரிமைக்கான ஆவணமாகும். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர், அந்தத் தண்டனைக்கு உள்ளாகிறோம் என்ற மனநிலையில் நீண்டகாலம் சிறைக் கொட்டடியில் அடைக்கப் பட்டிருப்பது, அரசியலமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று நீதிபதி கூறுகிறார். இந்த அடிப்படையில் நீதி மன்றங்கள்

தூக்குத் தண்டனைகளை ரத்து செய் துள்ள பல்வேறு வழக்குகளை பட்டியலிட்டுள்ளார். சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அரசியல் சட்டத்தின் 21வது பிரிவு வழங்கியுள்ள அடிப்படை உரிமை பொருந்தும் என்று நீதிபதி இத்தீர்ப்பில் நிறுவுகிறார். சட்டத் தினால் நிலைநாட்டப்பட்ட நடைமுறைகளைத் தவிர, வேறு முறைகளில், ஒருவருடைய வாழ்க்கையை அல்லது தனி நபர் சுதந்திரத்தைப் பறித்து விட முடியாது என்று 21 ஆவது பிரிவு கூறுகிறது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அத் தண்டனையை நிறைவேற்றாமல், நீண்டகாலம் கொட்டடியில் அடைத்து வைப்பது அரசியல் சட்டத்தின் 21வது பிரிவுக்கு எதிரானதே என்று நீதிபதி சின்னப்ப ரெட்டி இத் தீர்ப்பில் வலியுறுத்துகிறார்.

- எடிகாஅளம்மா வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அவருக்கு இரண்டரை ஆண்டுகள் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாததால் அவரது தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

- பகவான் புக்ஸ் வழக்கில் இரண்டரை ஆண்டுகள் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றப் படாததாலும், சாது சிங் என்பவர் வழக்கில் முன்றரை ஆண்டுகள் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாததாலும் தூக்குத் தண்டனைகள் இந்த வழக்குகளில் ஆயுள் தண்டனைகளாக மாற்றப்பட்டன.

- 1978 ஆம் ஆண்டு உபியில் சாது சிங் என்பவருக்கு வழங்கப்பட்ட மரணதண்டனை மூன்று ஆண்டு 7 மாதங்கள் வரை நிறைவேற்றப் படாததால் காலதாமதத்தை கருத்தில் கொண்டு நீதிபதிகள் ஜெசின்னப்பாரெட்டி, ஜெஜெசென், ஏபி. சர்க்காரியா ஆகியோர் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனை யாகக் குறைத்தனர்.

கிரிமினல் சட்ட நடைமுறைகளின்படி மாவட்ட நீதிமன்றம் வழங்கும் தூக்குத் தண்டனையை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும். இப்படி தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு உயர்நீதிமன்றம் விசாரணையில் முன்னுரிமை தர வேண்டும். உச்ச நீதிமன்றத்துக்கும் இது பொருந்தும். இத் தண்டனைகளை நிறுத்தவோ, ரத்து செய்யவோ, குறைக்கவோ, ஆளுநருக்கும், குடியரசு தலைவருக்கும் அரசியல் சட்டத்தில் அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. மேல்முறையீட்டுக்கும், மறுபரிசீலனைக்கும் நியாய மான கால வரம்புகள் இருக்கவே செய்கின்றன.

இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு இரண்டாண்டு காலம் வரை அத் தண்டனை நிறைவேற்றப்படாத நிலையில் அதற்குப் பிறகு,

அவர், அரசியல் சட்டம் வழங்கியுள்ள 21வது பிரிவுஅடிப்படை உரிமைகளின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யக்கோரும் உரிமையைக் கோர முடியும் என்றே கருதுகிறோம். எனவே மனுதாரரின் மனுவை ஏற்று, தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டு, அதற்கு பதிலாக ஆயுள் தண்டனை வழங்கப்படுகிறது.

(Making all reasonable allowance for the time necessary for appeal and consideration of reprieve, we think that delay exceeding two years in the execution of a sentence of death should be considered sufficient to entitle the person under sentence of death to invoke Article 21 and demand the quashing of the sentence of death. We thereore, accept the special leave petition, allow the appeal as also the writ petition and quash the sentence of death. In the place of the sentence of death. We substitute the sentence of imprisonment for life.)

"சட்டத்தின் நடைமுறை தண்டனை வழங்கிய தோடு முடிவுக்கு வந்துவிடவில்லை. தண்டனையை செயல்படுத்துவதும், அதில் அடங்கியிருக்கிறது. தூக்குத் தண்டனையை நிறை வேற்றாமல் நீண்டகாலம் காவலில் காக்க வைத்திருப்பது நீதிக்கு, நேர்மைக்கு, தக்க காரணங்களோடு உட்படாத நடைமுறை என்பதால் இந்தத்தவறை நேர் செய்வதற்கான வழி தூக்குத் தண்டனையை ரத்து செய்வதாகும்."

(Procedure established by law does not end with the pronouncement of sentence; it includes the carrying out of sentence. Prolonged detention to await the execution of a sentence of death is an unjust, unfair, and unreasonable procedure and the only way to undo the wrong is to quash the sentence of death)

தயாசிங் எதிர் இந்திய அரசு

பஞ்சாப் முதல்வர் பிரதாப் சிங் கெய்ரோன் சுடப்பட்ட வழக்கில் மரணதண்டனை பெற்றவர் தயாசிங். கல்கத்தா அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவரது மரண தண்டனை உறுதி செய்யப்பட்டு, குடியரசு தலைவர் மற்றும் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் 1991 இல் உச்சநீதிமன்றத்துக்கு தயாசிங் கடிதம் எழுதினார். நீதிபதிகள் ஜெ.எஸ். வர்மா, எல்.எம். சர்மா முன் விசாரணைக்கு வந்தது. 1972 ஆம் ஆண்டிலிருந்து சிறையில் அடைக்கப்பட்டு, 1988 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டதைக் கவனத்தில் கொண்டு தூக்குத் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனையாகக் குறைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

(Judgement reported in 1991(3) SCC61)

தூக்குத் தண்டனை: சில வரலாற்றுத் தகவல்கள்

– தமிழச்சி தங்கப்பாண்டியன்

தூக்குத் தண்டனை மனித உரிமைக்கு எதிரானது என்ற அழுத்தமான வாதங்களை முன்வைக்கும் கட்டுரையாளர், உலக வரலாற்றிலிருந்து சம்பவங்களை சுட்டிக் காட்டுகிறார்.

ஒவ்வொரு புனிதருக்கும் கடந்த காலம் உண்டு, எதிர்காலம் உண்டு என்று சொல்லுவார்கள். இதில் யார் பாவி, யார் புனிதர் என்பதை எது தீர்மானிக்கின்றது, அவற்றின் அளவுகோல்கள் என்ன அந்த தரக் கட்டுப்பாடுகளை நிர்ணயிக்கின்ற அதிகார மய்யம் எது? அந்தப் புள்ளியிலிருந்து துவங்கினால்....

ஒரு காலத்தில் கொள்ளைக்காரனாக இருந்த வால்மீகி, இன்னொரு காலத்திலே மாபெரும் இதிகாச புலவராக இராமாயணம் எழுதுபவராக மாற முடியும் என்றால், எந்த குற்றத்திற்காகவும், எதற்காக ஒரு மனிதனின் உயிரைப் பறிக்க வேண்டும்? என்ற கேள்வி எழுகிறது. எப்பொழுதுமே நிகழ்ந்து கொண்டிருப்பது என்னவென்றால் ஒரு ஏழையோ, ஏமாளியோ, கறுப்பரோ, நீக்ரோவோ இவர்கள்தான் தூக்கிலிடப் பட்டுக் கொண் டிருக்கிறார்கள். பணம் படைத்தவர்கள், வெள்ளைக் காரர்கள் தண்டனையிலிருந்து தப்பித்து விடுகிறார்கள் என்று அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிபதி மார்ஷல் கூறினார்.

சீனபேமாட் என்ற ஈரானிய இளைஞன், தனது 18 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய பின்பு, இரண்டு வாரங்கள் கழிந்த ஒரு நாளில் அவனுக்கு மரண தண்டனை நிறைவேற்ற நாள் குறிக்கப்பட்டது. அவனது முகம் கறுப்பு அங்கியால் மூடப்பட்டு இருக்கின்றது. அந்தக் கயிற்றை அவன் முத்தமிடுவதற்கு முன்பாக அந்த மேடையிலே அவனுடைய கடைசி ஆசை என்னவென்று கேட்கப்படு கின்றது. சீனா சொல்லுகின்றான், மே என்று சொல்லப் படுகின்ற மத்திய கிழக்கு மத்தியப் பகுதிச் சார்ந்த அந்த புல்லாங்குழல் இசைக் கருவியை இசைக்க விரும்புகிறேன் என்று சொல்லுகின்றான். அனுமதி அளிக்கப்படு கின்றது. உள்ளத்தை உருகச் செய்கின்ற அந்த இசையிலே மயங்கினார்கள், அவனால் கொல்லப் பட்டவர்களின் உறவினர்கள், அவனுடைய தண்டனையைப் பார்த்து அங்கே மன ஆறுதல் பெற வேண்டும் என்ற ஆசையோடு வந்திருந்த அந்த உறவினர்கள் மனம் மாறுகின்றனர். ஈரானிய நாட்டுச் சட்டப்படி அந்த தண்டனை ரத்தாகிறது. அதற்கு நிகராக 'தியா' என்று சொல்லப்படுகின்ற பரிகாரத் தொகையைப் பெற்றுக் கொண்டு அவனுக்கு அந்த மரணதண்டனை ரத்து செய்யப்படுகின்றது. இன்றைக்கும் கராத் என்ற நகரிலே அவன் சிறையிலே இருக்கின்றான்.

ஒரு பத்து வயது அமெரிக்கச் சிறுமி, டெக்சாஸ் நகரத்திலே அவள் தந்தை தூக்கிலிடப்பட்டபோது, உலக மக்களைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்டாள். "இன்றைக்கு இன்னொரு வரை கொன்றதற்காக என் தந்தையை இவர்கள் கொல்கிறார்கள் என்றால் இவரைக் கொல்வதற்காக நாங்கள் யாரைச் சென்று கொல்வது" என்று! இப்படி முடிவற்ற தொடர் சங்கிலியாக சென்றுக் கொண்டிருக்கின்ற இந்த எதிர்வினைகளை முற்று முழுதாக ஒழிக்க வேண்டும். அது முடியுமா? முடியும். மரண தண்டனை முற்றாக ஒழிக்கப்படுகின்ற அந்தக் கணத்திலே தான் அது சாத்தியம்.

மரணதண்டனைக்கான தொடக்கக்கால வரலாறுகள் ரத்தக்கறை படிந்ததாகவே இருக்கின்றது. 18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலே பிளடிக்கோடு என்ற சட்டத்தினால் ஏழே வயதான எமான் என்ற சிறுவனும் 11 வயதான யேன் என்கின்ற அவனது சகோதரியும் வெறும் சாதாரண திருட்டுக் குற்றத்திற்காக தூக்கிலிடப்படு கின்றார்கள். அன்றையக் காலகட்டத்திலே அது பற்றிய சிறு செய்திக்கூட இங்கிலாந்து பத்திரிகைகள் வெளியிட வில்லை.

நவீன காலத்துச் சீனாவிலே மரண தண்டனைகள் பல நிறைவேற்றப் பட்டுள்ளன. இன்றைக்கும் சீனா தூக்குத் தண்டனையை அமுல்படுத்து கிறது. ஆதி காலத்திலே கேன் டைனாஸ்டி என்கின்ற சீன மன்னர் பரம்பரையிலே டெய்ல்சான் என்கின்ற அரசர் கி.பி. 747 லிருந்து 759 வரையிலே மரணதண்டனையை முற்றிலுமாக ஒழித் திருந்தார் என்பதை வரலாற்றில் படிக்கிறோம்.

அமெரிக்காவிலே மிக்சிகன் மாகாணம் தான் முதன்முதலில் மரணதண்டனை தடைச் சட்டத்தை அமுலாக்கியது, 1847 இல்! தற்போது அமெரிக்காவிலே 12 மாகாணங்களும், கொலம்பியாவும் மரண தண்டனை முற்றிலுமாக ஒழித்திருக்கின்றன. நாம் இன்றைக்கும் கல்வியிலும் வாழ்க்கை முறையிலும் முன்னோடியாக ஏற்றுக் கொண்டுள்ள பிரிட்டானிய அரசிலே இன்றைக்கு மரணதண்டனை என்பது கிடையாது. பிரான்சும் மரண தண்டனையை ஒழித்து விட்டது.

மிகக் குறிப்பான செய்தி ஒன்றை நான் சொல்ல வேண்டும் என்றால், ஓமன் நகரத்திலே இருக்கின்ற குலாசியம் என்கின்ற மிகப் பெரிய அரங்கிலே இன்றைக்கும் உலகில் எங்காவது ஒரு மரண தண்டனை ரத்துச் செய்யப்படுமானால் அன்றைய தினம் குலாசியம் முழுவதும் தீபங்களால் அலங்கரிக்கப்படுகின்றது. மரண தண்டனை ஒத்தி வைக்கப்பட்டாலே அன்றைய தினம் குலாசியம் முழுவதுமே தீபங் களால் அலங்கரிக்கப்படு கிறது. உலக அரங்கிலே அய்ரோப்பாவின் பல தேசங்கள் பசிபிக் பகுதி நாடுகள் மிகக் குறிப்பாக ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா ஆகிய அனைத்து நாடுகளும் மரண தண்டனையை ஒழித்துவிட்டன. இலத்தின், அமெரிக்காவிலே (தென் அமெரிக்க

நாடுகள்) பிரேசிலை தவிர வேறெங்கும் மரண தண்டனை கிடையாது. உலக புள்ளி விவர கணக்குப்படி குற்றங்களின் சதவீதம் அதிகமாக பதியப்பட்டிருக்கின்ற தென் ஆப்பிரிக்காவிலே மரண தண்டனை கிடையாது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மரண தண்டனைக்கு ஆதரவாக முன் வைக்கிற ஒரு கருத்து மரண தண்டனை குற்றங்களை குறைக்கின்றது என்பதாகும். தொடர் குற்றங்களைத் தடுக்கின்றது, ஆயுள் தண்டனையைக் காட்டிலும் அதிக செலவில்லாதது, சில குறிப்பிட்ட குற்றங்களைச் செய்யாமல் அச்சுறுத்த அதுவே சரியான தீர்வு என்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்தத் தண்டனை தவறாக குற்றம் சாட்டப்பட்டவர்களையும் பழி வாங்கி இருக்கின்றது. சிறுபான்மை ஏழை மக்களுக்கு பெரும் தீங்கை இழைப்பதாக இருக்கின்றது-

நீதியரசர் கிருஷ்ணய்யர் எடுத்துச் சொன்ன இரண்டு வழக்குகளை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். ஒன்று மிகப் பிரசித்திப் பெற்ற பயோலி வழக்கு. பயோலி வழக்கு என்பது பயோலியிலே இரண்டு வகுப்பினரிடையே பதற்றம் உருவாகிய காலத்திலே நடைபெற்ற வழக்கு. இந்து மதவெறியர் என கருதப்பட்ட ஒருவரை சில இஸ்லாமியர்கள் துரத்திச் செல்கிறார்கள். இந்த இந்து அங்கிருந்த வழக்கறிஞர் வீட்டிற்குள் நுழைந்து விட்டான். விரட்டி வந்த அய்வரில் 3 பேர் வெளியே நின்று விட்டனர். இருவர் உள்ளே சென்று, அந்த இந்துவை கொன்றுப் போட்டனர். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் அய்வர் பெயரும் இடம் பெற்றது. இந்த அய்ந்து பேரும் துரத்திச் சென்று வீட்டிற்குள் கொலை செய்தனர் என்றிருந்தது. முதல் தகவல் அறிக்கை என்பது காவல் துறையின் புனித நூல் அதை மாற்ற முடியாது. ஆகவே மூவர் நிரபராதிகள் என்று தெரிந்தும் அய்வருக்கும் எதிராக வழக்குப் புனைந்து சாட்சியையும் இட்டுக் கட்டியது காவல்துறை. பின்னர் கிருஷ்ணய்யருக்கு தெரிந்த ஒரு ஆய்வாளர் மூலம் உண்மை அவருக்கு தெரிய வருகின்றது. அந்த காவல்துறை ஆய்வாளர் வாக்கு மூலத்திலே இப்படி சொன்னதாக கிருஷ்ணய்யர் பதிவு செய்கின்றார்.

அந்த ஆய்வாளர் சொல்லுகின்றார், அய்யா அய்ந்து பேர் இருந்தனர். சம்பந்தப்படாத மூவரை வழக்கில் சேர்க்காமல் விட்டிருந்தால் நீதிமன்றம் என்ன சொல்லி யிருக்கும்? நிரபராதிகளான மூவர் பெயர் முதல் தகவல் அறிக்கையில் பொய்யாக சேர்க்கப்பட முடியும் என்றால், ஏன் மற்ற இருவர் பெயரும் பொய்யாக சேர்க்கப்பட்டிருக்க முடியாது என்று கேட்டு அனைவரையும் விடுவித்திருக்க வேண்டும். அப்போது என் வேலை போயிருக்கும். ஆகவே என் வேலையை காப்பாற்றிக் கொள்வதற்காக அய்வருக்கு எதிராகவும் சாட்சியம் உண்டுப் பண்ணி விட்டோம். அந்த அய்வருமே தூக்கிலிடப்பட்டு விட்டனர். குற்றவியலின் கொடுமையும், நீதிபதிகளின் மனம் போகிற போக்கையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கிருஷ்ணய்யர் இதைப் பதிவு செய்கின்றார்.

இரண்டாவது "ஒரு அரசு அதிகாரியின் 25 ஆண்டுகள்" என்ற புத்தகத்தை நீதிபதி ஏ.எஸ்.வி. அய்யர் எழுதியிருக்கின்றார். அந்தப் புத்தகத்திலே வருகின்ற ஒரு சம்பவத்தை கிருஷ்ணய்யர் சொல்லுகின்றார், ஒரு ஆங்கிலேயே நீதிபதி குற்றம்சாட்டப்பட்ட ஒருவருக்கு மரண தண்டனை விதித்து விடுகின்றாராம். அன்றைய தினம் இரவிலே அவருடைய கனவிலேகுற்றம்சாட்டப்பட்டு இறந்தவன் வருகின்றான். (கனவுகளிலே நமக்கு நம்பிக்கை இல்லை. கனவு சொல்கிறபடி நடப்பதில்லை என பகுத்தறிவாளர்களாகிய நாம் நன்றாக அறிவோம்) "நீங்கள் குறிப்பிட்ட அந்த ஆவணத்தைப் படித்திருந்தால் என் உயிரை இப்படி முடித்திருக்க மாட்டீர்கள். ஆனால் நீங்கள் அதைப் படிக்காமல் விட்டு விட்டீர்கள்" என்றானாம். மறுநாள் அந்த நீதிபதி கோப்புகளை ஆராய்ந்து அந்தக் குறிப்பிட்ட ஆவணத்தை கண்டுபிடித்து விட்டார். அதனை முன்பே படிக்காமல் விட்டுவிட்டதையும், முன்பே படித் திருந்தால் தீர்ப்பு நேர்மாறாய் இருந்திருக்கும் என்பதையும் உணர்ந்தார். அவர் பிறகு தன்னைத் தானே சுட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சிகளை வைத்துப் பார்க்கும்போது நாம் உணர வேண்டியது, அறிய வேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். "எந்தக் காலக்கட்டத்திலும் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு அவர்களுடைய அந்த செயலுக்கான நியாயத்தை எடுத்துச் சொல்லுகின்ற நியாயத்தை வழங்குகின்ற தராசினுடைய முனைகளை தீர்மானிப்பவை அதிகாரத்தின் மய்யங்களாகவே இருந்திருக்கின்றன. ஆகையால் அவை பணம் படைத்தவர்களுக்கும், சாட்சியங்களை நன்றாக திரிபு செய்பவர்களுக்கும், மிகக் குறிப்பாக போராளிகளுக்கும் எதிரானதாகவே இருந்திருக்கின்றது. இது பற்றி நாம் கவனத்தில் கொண்டு இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கிலும் மரணதண்டனை ரத்துச் செய்யப்படுவதற்கு நம்முடைய குரலை ஓங்கி பதிய வைக்க வேண்டும்.

மிகச் சமீபத்திலே மரண தண்டனை ரத்துச் செய்துள்ள நாடுகளை பார்ப்போம். 2007 செப்டம்பரில் கோபனும், டிசம்பரில் தென் கொரியாவும், 2008 சனவரியில் உஸ்பெகிஸ்தானும் முற்றாக மரண தண்டனையை ஒழித்திருக்கின்றன. இவைகளிலிருந்து இந்தியாவும் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என நினைக்கின்றோம். கிட்டதட்ட ஜூன் 1, 2008-லிருந்து 92நாடுகளில் மரண தண்டனை முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டன. 11 நாடுகளில் சில வகையான குற்றங்களுக்கு மட்டுமே மரண தண்டனை உள்ளது. 34 நாடுகள் 10 வருடங்களாக மரண தண்டனையை நிறுத்தி வைத்திருக்கின்றன.

முன்னேறிய நாடுகளாக நாம் சொல்லுகின்ற சிங்கப்பூர், ஜப்பான், அமெரிக்கா ஆகியவை இன்றைக்கும் மரண தண்டனையை ரத்துச் செய்யாமல் இருக்கின்றன. ஆனால், நம்பிக்கைக்குரிய விசயமாக ஒன்றை பார்க்கலாம். அய்ரோப்பிய ஒன்றியம் என்று சொல்லுகின்ற அந்த கூட்டமைப்பும், அதற்கான 'கவுன்சிலும்' தங்களுடைய அமைப்பிலே

உறுப்பினராக சேர வேண்டும் என்றால், அந்த நாடுகள் மிகக் கண்டிப்பாக மரண தண்டனையை ஒழித்திருக்க வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக வைத்துக் கொண்டிருக்கின்றன. மிக சமீபத்தில் துருக்கிக் கூட தனது சட்டத்தை திருத்திக் கொண்டு அதிலே உறுப்பினராக சேர்ந்துள்ளது.

1973-லிருந்து அமெரிக்காவில் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த மரண தண்டனை1977 இல் இருந்து அமுலுக்கு வந்திப்பது வருத்தத்திற்குரியதுதான்.

குறிப்பாக நாம் மரண தண்டனை பிரச்னையில் கவனத் தில் கொள்ள வேண்டியது, இளவயது குற்றவாளிகளுக் கான தண்டனை, சிவில், கிரிமினல் என்று முத்திரைக் குத்தப்படுகிற இளவயது குற்றவாளி களுக்கான மரண தண்டனை குறித்து மனித உரிமை ஆர்வளர்கள் அனைவருமே அதீதமான போர்க்குரலோடு அதை எதிர்க்க வேண்டும்.

அடுத்ததாக நாம் மிக மிக வலியோடு கவனிக்க வேண்டிய விசயம் இந்த மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்ற பொழுது எந்த வகையில் அவை நிறைவேற்றப்படு கின்றன என்பதாகும். மரண தண்டனை அறிவிக்கப்பட்ட அந்த கணத்தில் இருந்து எப்படி சாவை நாம் எதிர்க்கொள்ளப் போகிறோம் என்கின்ற அந்த வேதனையிலும், அந்த முள் வலியிலுமே மனிதனுடைய இறப்பு நிகழத் தொடங்கிவிடுகிறது. எத்தனை வழிகளில் எல்லாம் அவர்களுக்கான தண்டனை நிறைவேற்றப்படுகின்றது என்று பார்த் தோமேயானால் சாகும் வரை தூக்கிலிடுதல், மின்சார நாற்காலி, மரண வாயு, டெட்டால் ஊசி என மிக மிக கடுமையான, கொடுமையான வலி மிகுந்த வழிகளிலேயே அவர்கள் மரணத்தை சந்திக்க நேர்கின்றன. மிக வருத்தத்திற்குரிய கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு விசயம் நைட்ரசன் ஆக்டிபேகேஷன் என்ற முறையும் இப்போது சமீபகாலமாக புழக்கத் திலே வரலாமா? வேண்டாமா என்ற ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றதாம். அவற்றையும் நாம் கவனத்தில் கொண்டு மிக, மிக உரத்தக் குரலெடுத்து நாம் இவற்றிற்கு முடிவுக் கட்ட வேண்டும்.

1974-லே பெக்காரியா என்பவர் எழுதிய 'ஆன் கிரைம் அன்ட் பனீஷ்மென்ட்' என்ற புத்தகத்தை படித்து விட்டுத் தான் ஒரு அரசு மனம் திருந்தி ஆஸ்திரியாவிலே மரண தண்டனையை குறைத்திருக்கின்றது. இந்த புத்தகத்திலே இந்த தண்டனை எந்த வகையிலும் குற்றங்களை குறைக்கப் போவதில்லை என்று மிக அழகாக கோர்வையாக அன்றே அந்த எழுத்தாளர் எடுத்து வைத்த வாதத்திலே மயங்கி, அதிலே மனம் திருந்திய ஆஸ்த்ரிய அரசர், தனது ஆளுமைப் பிரதேசத்திலே 1806-லிருந்து அந்த மரண தண்டனையை ஒழித்தார். இன்றளவும் அந்த தண்டனை ஒழிக்கப்பட்ட நவம்பர் 30 தான் உலகமெங்கும் 'சிட்டிஸ் பார் லைப்டே' என்று ஒரு தினமாக அனுசரிக்கப்பட்டுக் கொண்டாடப் படுகிறது. அந்த ஒரு பொன்னான நாள் இந்தியாவிலே மரண தண்டனை ஒழிக்கப்பட்டு நாமும் கொண்டாடப்படுகின்ற ஒரு நிலை நமக்கும் வரும் என நாம் நம்புவோம்.

ஆகவே படைப்பாளிகளாகிய, போராளிகளாகிய நாம் மிக வலுவாக எழுத்திலே, பேச்சிலே தெருமுனைக் கூட்டங்களிலே, மாநாடுகளிலே குறிப்பாக பொது மக்களுக்கு அதிலே இருக்கின்ற பாதகங்களை அவர்களுக்கு புரியும்படி எடுத்துச் சொல்லி, அவர் களுடைய எண்ணங்களை காரணம் காட்டி, இன்றைக்கு இருக்கின்ற இந்த இந்துத்துவா சக்திகளும், இனத்திற்கு எதிரான சக்திகளும் எப்படி ஒரு மாயையை உருவாக்கி யிருக்கின்றனவோ அந்த மாயையிலிருந்து மக்களை வெளிக் கொண்டு வரவேண்டும்.

காந்தி சொல்கின்றார், "கடவுள் தந்த உயிரைப் பறிக்க மனிதனுக்கு உரிமையில்லை. உயிரைப் பறிக்கும் உரிமை அரசுக்குக் கிடையாது". கடவுள் மீது நம்பிக்கையற்றவர்கள் நாங்கள். ஆனால் மனிதர்கள் மீதும், மனித உயிர்கள் மீதும் அன்பும், நம்பிக்கையும் உடையவர்கள் என்பதால் உரத்துச் சொல்கின்றோம். உயிரைப் பறிக்கும் உரிமை அரசுக்குக் கிடையாது.

கிருஷ்ணய்யர் சொல்லுகின்றார், "நீதிமன்றம் விதித்த தண்டனை யால் ஒரு மனித உயிர் பறிக்கப்படும் ஒவ்வொரு வைகறை பொழுதிலும் மனித உரிமைக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கின்றன. நீதிபதிகள் விதிக்கும் மரணதண்டனைகளை எதிர்த்து நாம் வாதாடுகின்றோம். ஆனால், பல நேரங்களில் அரசின் கையில் உயிர் இழப்பவர்கள் ஏராளமானோர். பொய் மோதல்கள், காவல்துறை, இராணுவ படுகொலையில் சாகிறார்களே தவிர, நீதிபதிகள் விதித்த மரண தண்டனையால் அல்ல; நாம் இந்த படுகொலைகளையும் எதிர்த்துப் போராட வேண்டும். ஒவ்வொரு மனிதனுமே திருத்தப்படக் கூடியவன் தான். உலகிலேயே படுமோசமான கயவனைக்கூடத் திருத்திவிட முடியும். பொருத்தமான பயிற்சியின் வாயிலாக, பொருத்தமான சீர்படுதலின் வாயிலாக, மனப்பாங்கை மாற்றும் படியான பொருத்த மான வழிமுறைகள் வாயிலாகவும், பொருத்தமான சகவாசத்தின் வாயிலாக பொருத்தமான விழுமங்களை புகட்டுவது மூலமாக மனிதர்களை நாம் மாற்ற முடியும். மனித உரிமைகளுக்காக ஓங்கி குரல் கொடுப்போம்; கொடுத்துக் கொண்டிருப்போம், உரிமைகளைப் பெறுவோம்.

(புரட்சிப் பெரியார் முழக்கம் 11.11.2010, 18.11.2010, 18.08.2011 இதழ்களின் தொகுப்பு)

யாருக்காக ராஜீவ் கொலை செய்யப்பட்டார்?

விடை தெரியாத திடுக்கிடும் கேள்விகள்....

நாடு முழுவதும் இன்று ஜெயின் கமிஷன் மீதே கவனம் செலுத்துகிறது. அதே சமயம் பூந்தமல்லியில் ராஜீவ் கொலை வழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைகள் முடிந்து விட்டன. இந்த நீதிமன்றத்தின் நீதிபதி, 'வழக்கின் தீர்ப்பு 1998 ம் ஆண்டு ஜனவரி 28 அன்று வழங்கப்படும்' என்று அறிவித்திருக்கிறார். ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட 26 பேரும், தேசத்தின் குடிமக்களும் இந்தத் தீர்ப்பை எதிர்நோக்கி ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வழக்கில் குற்றவாளிகளின் சார்பில் எதிர்தரப்பு வாதம், 50 நாட்கள் நடைபெற்றது. இரகசியமாக நடந்த இந்த வாதங்களின் பல முக்கியப் பகுதிகள் தமிழன் எக்ஸ்பிரஸுக்குக் கிடைத்தன. சொல்லப்படாத பல பின்னணிக் கதைகளை வாசகர்கள் முன் கொண்டு வருகிறோம்.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள், ராஜீவ் கொலையை விசாரித்த விசேஷ புலனாய்வுத் துறை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர்கள் ஆகியோர் முன்னிலையில் தமிழக போலீஸின் பாதுகாப்புடன் எதிர்தரப்பு வாதம் நடந்தது. 1993 ம் ஆண்டு தொடங்கிய இந்த வழக்கு, 50 மாதங்கள் நடந்தது. 288 சாட்சியங்கள், 3000 அரசுத்தரப்பு ஆவணங்கள், 1000 எதிர்தரப்பு ஆதாரங்கள் ஆகிய அனைத்தும் நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்டன. எதிர்தரப்பு வாதத்தில் எழுந்த பல கேள்விகளுக்கு விடையில்லை. சிறப்பு புலனாய்வுத் துறையின் இந்த விசாரணைகள், அதிகாரத்திலுள்ளவர்களின் அன்பைப் பெறும் வகையில் தான் நடந்தது என்று சந்தேகப்பட வைக்கிறது.

ராஜீவ் கொலை ஒரு வி.ஐ.பியின் மரணம் மட்டும் அல்ல; தேசத்தை சிதறச் செய்யும் மிகப் பெரிய சதி. பல அந்நிய சக்திகள் இந்தப் பரந்த தேசத்தைக் கட்டியாள நினைக்கும் தந்திரம். அதனாலேயே இந்த வழக்கிலுள்ள பல திடுக்கிடும் சம்பவங்கள், விசாரணையின் ஓட்டைகள் ஆகியன நமக்குத் தெரிய வேண்டியது மிக முக்கியம். இந்த விசாரணையில் எதிர்தரப்பு வாதங்களைத் தொடக்கி வைத்தவர் மூத்த வழக்கறிஞரான துரைசாமி. ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்த அந்த நீதிமன்ற அறையில் விசேஷ புலனாய்வுத் துறையின் 'முன் ஜோடிப்பு

கதைகளை' போட்டு உடைத்தாராம் துரைசாமி. அதேபோல் எதிர்தரப்பு வழக்கறிஞர் ராமதாஸும் தன் 11 நாட்கள் வாதத்தில் குற்றப் பத்திரிகையில் புனையப் பட்டுள்ள பல கற்பனைக் கதைகளை சாட்சியங்களோடு வெளிச்சத்துக்கு கொண்டு வந்தார்.

இந்த எதிர்தரப்பு வாதங்களின் க்ளைமாக்ஸாக அமைந்தது வழக்கறிஞர் சந்திரசேகரின் கடும்வாதம். ஆதார பூர்வமாகவும், உணர்ச்சிகரமாகவும் பேசிய சந்திரசேகர், விசேஷ புலனாய்வுத் துறை ஏற்கனவே முடிவு செய்து தங்கள் முடிவுகளுக்கு ஏற்ப வழக்கை ஜோடித்ததாக கடுமையாகக் குற்றம் சாட்டினார். 'நான் கேட்கிற சாட்சியங்களை புலனாய்வுத்துறை காட்டிவிட்டால் என் கட்சிக்காரர்கள் தாங்கள் குற்றம் செய்ததாக தாங்களே முன்வந்து ஒப்புக் கொள்வார்கள்' என்று கூட சவால் விட்டார். இப்படி ஐம்பது நாட்கள் நடந்த எதிர்தரப்பு வாதங்கள் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றன. இதோ அந்த விடை கிடைக்காத கேள்விகள்:

1.1991 ம் வருடம் மே மாதம் 21 ம் தேதி டெல்லியிலிருந்து தேர்தல் பிரச்சாரத்திற்குக் கிளம்பினார் ராஜீவ் காந்தி. அவர் ஒரிசா, ஆந்திரா வழியாக சென்னை வந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிகழ்ச்சி நிரலில் இல்லாத ஸ்ரீபெரும்புதூரில் நள்ளிரவுக் கூட்டத்தில் கலந்துகொள்ள அவர் எப்படி ஒப்புக் கொண்டார்?

2. ஸ்ரீபெரும்புதூருக்கு ராஜீவை எப்படியாவது வரவழைத்துவிட வேண்டும் என்று எங்காவது திட்டம் தீட்டப்பட்டதா?

3.புவனேஷ்வர், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ராஜீவ் பிரச்சாரத்திற்கு சென்றபோது அவருடன் இருந்தவர் பாதுகாப்பு அதிகாரி ஓ.பி. சாகர். ஆனால் அவர் சென்னைக்கு ராஜீவுடன் வரவில்லை ஏன்?

4பல்கேரிய நாட்டைச் சேர்ந்த தொலைக்காட்சிப் பத்திரிகை யாளர்கள் ராஜீவ்காந்தியின் சுற்றுப் பயணத்தில் உடன் வந்தார்கள். அவர்களுடைய வேலை,ராஜீவ் பிரச்சாரத்தை வீடியோவில் பதிவு செய்வது. ஒரிஸாவிலும், ஆந்திராவிலும் ராஜீவ் செய்த முதல்கட்ட சுற்றுப் பயணத்தில் கலந்துகொண்ட அவர்கள், ராஜீவ் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்களுக்கு செல்லவில்லை. அவர்கள் பயணம் செய்த விசேஷ விமானத்தின் பைலட்டுடன் விசாகப் பட்டினத்தில் ஒரு ஆடம்பர ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். அப்படி யானால் அவர்கள் உடன் வந்த காரணம் என்ன?

5. ராஜீவ் கிளம்புகிற விமானத்தில் கோளாறு ஏற்பட்டது. உடனே விமான நிலையத்திலிருந்து சர்க்யூட் ஹவுஸுக்குத் திரும்பினார் ராஜீவ். கோளாறு சரிசெய்யப்பட்டுவிட்டது என்கிற தகவல் அப்போதைய ஆந்திர முதல்வர் விஜயபாஸ்கர ரெட்டி மூலமாக கிடைத்தவுடன் விமான நிலையம் திரும்பினார் ராஜீவ். இந்தக் குழப்பத்தில் இந்த இரண்டு பல்கேரிய நாட்டு பத்திரிகையாளர்கள், பாதுகாப்பு அதிகாரி சாகரை தங்கள் காரில் ஏற்றிக் கொண்டு தாமதமாக விமான நிலையத்துக்கு வந்தார்கள். இதனால் ராஜீவுடன் விமானத்தில் பயணம் செய்ய சாகரால் முடியவில்லை. அனுபவம் மிக்க அந்தப் பாதுகாப்பு அதிகாரியை ராஜீவுடன் போகவிடாமல் செய்தது ஏன்?

6. சென்னையில் ராஜீவின் பாதுகாப்பு அதிகாரியாக செல்ல வேண்டிய பி.சி.குப்தா, சென்னை விமான நிலையத்தில் ராஜீவுக் காக காத்திருந்தார். அதே விமானத்தில் வந்திருக்க வேண்டிய சாகரிடமிருந்து கைத்துப்பாக்கியை அவர் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் சாகர் வராததால் கைத்துப்பாக்கி இல்லாம லேயே குப்தா, ராஜீவுடன் செல்ல நேர்ந்தது. இதற்கு ஏதாவது உள்நோக்கம் உண்டா?

7. ராஜீவ் மீனம்பாக்கத்திலிருந்து கிளம்பியவுடன் ராமாவரம் தோட்டம் அருகே பத்திரிகையாளர்கள் என்ற பெயரில் இரண்டு பெண்கள் அவர் காரில் ஏறினார்கள். அவர்களு டைய அடையாளங்கள் சோதனைக்குள்ளானதா? இன்றுவரை அவர்களை ஏன் விசேஷப் புலனாய்வுத்துறை விசாரிக்கவில்லை?

8. யார் அந்த பல்கேரியர்கள்? அவர்கள் எங்கு சென்றார்கள்?

9. யார் அந்த இரண்டு அயல்நாட்டு பெண் பத்திரிகை யாளர்கள்? அவர்கள் எங்கு சென்றார்கள்?

10. அந்த இரண்டு பத்திரிகையாளர்களும் ராஜீவை பேட்டி கண்டார்கள். ஆனால் தா. பாண்டியனும், மரகதம் சந்திரசேகரும் அவர்கள் என்ன பேசினார்கள் என்பது தெரியாது என்றார்கள். இவர்கள் எதை மறைக்க முயலுகிறார்கள்? ஏன்?

11. தான் கொலை செய்யப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு, பாகிஸ்தான் ஜனாதிபதி ஜியா-உல்-ஹக்கை கொன்றது சி.ஐ.ஏ.தான் என்றார் ராஜீவ். அவர் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? அவரை சொல்லத் தூண்டிய காரணம் என்ன? தனக்கெதிராகவும் இப்படி ஒரு திட்டம் இருக்கலாம் என்பது அவருக்கு முன்கூட்டியே தெரியுமா?

12. 1991 ஜூலை மாதம் அன்றைய மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான், எல்.டி.டி.ஈ.யைத் தவிர வேறு சில சர்வதேச நிறுவனங்களும், பலம் வாய்ந்த வெளிநாட்டு சக்திகளும் ராஜீவ் கொலையின் பின்னணியில் இருக்கிறார்கள் என்றார்.

13. உள்துறை அமைச்சர் அப்படி சொல்லக்காரணம் என்ன என்பதை விசேஷ புலனாய்வுத்துறை ஏன் விசாரிக்கவில்லை?

14. வளைகுடா போரின்போது அமெரிக்க விமானங்களுக்கு இந்தியா எரிபொருள் கொடுத்து உதவியது. இந்த உதவியைச் செய்த சந்திரசேகர் அரசைக் கடுமையாகக் கண்டித்தார் ராஜீவ் காந்தி. அமெரிக்காவிற்கு இதனால் ராஜீவ் மீது ஏற்பட்ட கோபத்தையும், இந்தக் கொலையின் பின்னணியில் சி.ஐ.ஏ.வுக்கு பங்கு உண்டா என்பதையும் ஏன் புலனாய்வுத்துறை விசாரிக்க வில்லை?

15. பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அராபத், 'ராஜீவ் உயிருக்கு ஆபத்து இருக்கிறது' என்று அன்றைய பிரதமர் சந்திரசேகரிடம் தெரிவித்தார்.' அவருக்கு இந்தத் தகவல் எங்கிருந்து கிடைத்தது? யார் மூலமாக ராஜீவுக்கு மிரட்டல்?' என்பதை ஏன் புலனாய்வுத் துறை விசாரிக்கவில்லை?

16. மேற்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளில் கொலைக்கான திட்டம் தீட்டப்பட்டிருந்தால் மட்டுமே அரபாத்திற்கு இந்தப் பின்னணி தெரிய வாய்ப்புண்டு.

17. மரகதம் சந்திரசேகர் ராஜீவ் காந்தியுடன் கூட்டம் நடந்த இடத்திற்கு வந்தார். அவருடைய மகள் லதா பிரியகுமார் தன் கணவருடனும் வழக்கறிஞர் மகேந்திரனுடனும் அரக்கோணத் திலிருந்து வந்தார். அவரது மகன் லலித் சந்திரசேகர் மனைவி வினோதினியுடன் எங்கிருந்து வந்தார் என்பதை விளக்கவே யில்லை. வினோதினி இலங்கையைச் சேர்ந்த ஜூனியஸ் ஜெயவர்த் தனாவின் மகள் என்பது தெரிந்தும் அவரை ஏன் விசாரிக்க வில்லை?சம்பவ இடத்தில் அந்தக் குடும்பத்தினர் இருந்தும் அவர்களை ஏன் விசாரிக்கவில்லை?

18. சிவராசனின் தாயாரும், வினோதினியின் தந்தையும் சிங்களவர்கள் தான். சம்பவ இடத்தில் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவின் தூதுவர்களாக இருக்க வாய்ப்புண்டு. இந்திய அமைதிப்படை விவகாரத்தில் பிரேமதாஸாவுக்கு ராஜீவ் மீது கோபம் உண்டு. அந்தக் கோணத்தில் ஏன் விசாரணை செய்யப்படவில்லை?

19. விடுதலைப் புலிகள், இலங்கை அரசு இரண்டுக்கும் ஒரு விஷயத்தில் ஒற்றுமை உண்டு. இந்திய அமைதிப்படை இலங்கையில் நுழையக் காரணமாக இருந்த ராஜீவ் மீது இரு தரப்பினருக்கும் கோபமுண்டு. இந்த விஷயத்தில் எதிர்தரப்பு வழக்கறிஞர் சந்திரசேகர் விசேஷப் புலனாய்வுத் துறைக்கு ஒரு சவால் விட்டார். 'வினோதினியின் பூர்வீகம் என்ன? அவரும், அவர் குடும்பத்தினரும் அப்பாவிகள் என்பதை நிரூபித்தால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவருமே தானாகவே தங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்வார்கள் என்றார். இறுதிவரை அவர் சவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சம்பந்தப் பட்டவர்கள் விசாரிக்கப்படவும் இல்லை.

20. காமினி திசநாயகா, அத்துலத்முதலி, விக்கிரமசிங்கே இவர்கள் எல்லாம் இலங்கையின் முக்கிய அரசியல்வாதிகள். இவர்கள் கொலை செய்யப்பட்ட போது அந்தப் பழி இலங்கை அதிபர் பிரேமதாஸாவின் மீது சுமத்தப்பட்டது. ராஜீவ் விஷயத்தில் ஏன் அந்தக் கோணத்தில் விசாரணை இல்லை?

21. சிவராசன், தணு, சுபா ஆகியோர் ஒரு அந்நிய சக்தியின் தூண்டுதலால் ஏன் இந்தக் கொலையை செய்திருக்கக் கூடாது? அந்த மூவரும் யாழ்ப்பாணத் தமிழர்கள் என்பதால் மட்டுமே அவர்களைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி விசாரணையை முடித்துவிட்டார்களா?

22. புலிகளையும், அதன் தலைவர் பிரபாகரனையும் சம்பந்தப் படுத்த என்ன பலத்த ஆதாரம் புலனாய்வுத் துறையிடம் உள்ளது?

23. பிரபாகனும், சிவராசனும் ரேடியோ மூலம் பேசியதை விசேஷப் புலனாய்வுத் துறை கேட்டதாகச் சொல்லப்படுவது ஏன் ஒரு கற்பனையான ஆதாரமாக இருக்கக்கூடாது?

24. 'விசேஷ' இலட்சியமுள்ள அரசியல்வாதிகள், ஏன் அவரது காங்கிரஸ் தோழர்களே கூட தங்கள் வளர்ச்சிக்கு ராஜீவ் தடையாக இருக்கிறார் என்பதால் கூலிப்படையினரை ஏவிவிட்டு ஏன் இந்தக் காரியத்தை செய்திருக்கக்கூடாது?

25. பல்வேறு நாட்டு ஆயுத வியாபாரிகள், பிரதமர் என்கிற முறையில் ராஜீவுடன் தொடர்பு வைத்திருந்தார்கள். கூலிப் படைகள் மூலமாக அவர்கள் ஏன் இந்தக் காரியத்தை செய்திருக்கக்கூடாது?

26. மறுபடியும் அமைதிப்படை தங்கள் நாட்டில் நுழைய லாம் என்கிற எண்ணத்தில் இந்தியாவுக்கு வலுவான தலைவர் இருக்கக் கூடாது என்று இலங்கை அரசு ஏன் நினைத்திருக்கக் கூடாது?

27. மூன்றாவது உலக நாடுகளின் தலைவர்களை அப்புறப்படுத்துவதில் சி.ஐ.ஏ. வுக்கு அதிக அக்கறை உண்டு. அந்த எண்ணம் ராஜீவ் விஷயத்தில் இருந்ததா?

28. புலிகளின் 'இந்துத்துவா' அபிமானம், இலங்கைத் தமிழர்களுக்கு உண்டான இந்து வெறி இரண்டையும் பயன்படுத்தி ஆர். எஸ்.எஸ். பிஜேபி இலங்கைத் தமிழர்கள் மூலமாக ஏன் இந்தக் காரியத்தை செய்திருக்கக்கூடாது? அவர்கள் ஆட்சியைப் பிடிக்க தடையாக இருக்கும் ஒரே தலைவர் ராஜீவ் தான். மகாத்மாவைக் கொன்றவர்கள் ஏன் ராஜீவைக் கொன்றிருக் கக்கூடாது?

29. வாழப்பாடி ஏற்றுக் கொள்ளவில்லை. மூப்பனார் அக்கறை காட்டவில்லை. ஆனால் மரகதம் சந்திரசேகர் மட்டும் டெல்லி சென்று ஏன் ஸ்ரீபெரும்புதூருக்கு வரவேண்டும் என்று ராஜீவை வற்புறுத்தினார்? தன்னை அறியாமல் சிக்கி ராஜீவ் மரணப்படுக்கையில் விழக் காரணமாகி விட்டாரா?

30. யார் இந்த பொட்டு அம்மான்? இப்படி ஒரு நபர் இருக்கிறாரா? அம்மான் ஒரு மூத்த தலைவர். ஒரு போரில் இறந்துவிட்டார். பொட்டு மட்டுமே உள்ளார் என்கிறது எல்.டி.டி.ஈ. வட்டாரம். உயிருடன் இல்லாத ஒரு நபரை எப்படி இரண்டாவது குற்றவாளியாக புலனாய்வுத்துறை முத்திரை குத்தியது?

31. பத்மநாபா கொலை வழக்கையும், இந்த வழக்கையும் ஒப்பிட்டால் பல உண்மைகள் வெளிவருகின்றன. தமிழ்நாடு காவல்துறையின் 'க்யூ' பிராஞ்ச்,பத்மநாபா வழக்கை விசாரித்தது. விசேஷப் புலனாய்வுத்துறை, ராஜீவ் கொலை வழக்கை விசாரணை செய்தது. இரண்டு விசாரணை அமைப்புகளும் சதி நடந்த இடம் யாழ்ப்பாணம் என்கின்றன. பத்மநாபா வழக்கில் குற்றவாளிகளில் சிவராசன். ராஜீவ் வழக்கில் அவர் முக்கிய குற்றவாளி. அப்படியானால் ராஜீவ் கொலையில் குற்றவாளியாகக் கருதப்பட்ட பிரபாகரன் பத்மநாபா வழக்கில் ஏன் குற்றவாளியாக சேர்க்கப்படவில்லை? ஆகவே பிரபாகரன் பெயரை நுழைப்பது அரசியல் முடிவே தவிர விசாரணையினால் கிடைத்த தெளிவே அல்ல. கடும் உள்நோக்கத்துடன் வழக்கிற்கு உயிர்கொடுக்க புலனாய்வுத்துறை செய்த முயற்சி இது.

32. விமான நிலையத்தில் ராஜீவை சந்தித்தார் கவிஞர் காசி. ஆனந்தன். அவர் பிரபாகரனிடமிருந்து ராஜீவுக்கு கொண்டு வந்த தகவல் என்ன? 'ஈழ விடுதலைக்கு ராஜீவின் உதவி தேவை' என்று பிரபாகரன் காசி ஆனந்தன் மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தால் ஏன் அவரை பிரபாகரன் கொலை செய்ய வேண்டும்?

33. இந்தியா மற்றும் தமிழகத்தில் தான் தனக்கு அனுதாபமும், ஆதரவும் கிடைக்கும் என்பது பிரபாகரனுக்கு தெரியும். அப்படியிருக்கும்போது இந்த மக்களின் வெறுப்பை சம்பாதிக்கிற தவறைச் செய்து, நாட்டைவிட்டே துரத்தப்பட்டு தடை செய்யப்படுகிற அளவுக்கான முட்டாள் தனத்தையா பிரபாகரன் செய்தார்?

34. லதா கண்ணன், ராஜீவ் காந்தியை நிறுத்தி கவிதை படித்தார். அதுவே பக்கத்திலிருந்த தனு என்கிற மனிதகுண்டு வெடிக்கக் காரணமாக இருந்தது. ஏன் அவர் பெயர் குற்றவாளிப் பட்டியலில் இல்லை? லதா கண்ணனை பயன்படுத்தித்தான் தனு உள்ளே வந்தார். இறந்து போன ஹரிபாபு குற்றவாளி என்றால் லதா கண்ணனை ஏன் சேர்க்கவில்லை? காங்கிரஸ் மற்றும் அதன் தொண்டர்களின் மீது புலனாய்வுத் துறைக்கு ஏன் இத்தனை பரிவு?

35. ஸ்ரீபெம்புதூருக்கு செல்லும் முன் இரண்டு தெருமுனைக் கூட்டங்களில் பேசினார் ராஜீவ். அந்தக் கூட்டங் களில் மேடை வரை உடன் வந்தார் வாழப்பாடி ராமமூர்த்தி. ஸ்ரீபெரும்புதூரில் மட்டும் ஏன் தொலை தூரம் தள்ளிப் போனார்?

36. அப்பாவிப் பொதுமக்கள், பாதுகாப்பு அதிகாரிகள் பலர் ராஜீவுடன் உயிரிழந்தார்கள். ஆனால் காங்கிரஸ் தொண்டர் ஒருவருக்கும் இலேசான காயம் கூட இல்லையே. அது ஏன்?

37. தணு, சுபா, சிவராசன் மூவரையும் ஸ்ரீபெரும்புதூருக்கு அழைத்து வந்தவர் லதா பிரியகுமார் என்று கருதப்படுகிறது. குறிப்பாக பெண்கள் பகுதிக்கு அழைத்து வந்து லதா கண்ணனிடம் அவர்களுக்கு உதவும்படி சொன்னார். அவர் மீது ஏன் குற்றம் சுமத்தப்பட வில்லை?

38. பிரபாகரன், சிவராசன் இருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட பழைய படத்தை வைத்துக் கொண்டு பிரபாகரனுக்கு இதில் தொடர்பு உண்டு என்று எப்படிச் சொல்லலாம்?

39. தணு, சுபா, சிவராசன் மூவரும் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, மேற்கத்திய, ஐரோப்பா, இந்தியா கூலிப்படையின் கையாட்களாக ஏன் ஆகியிருக்கக் கூடாது?

40.மார்கரெட் ஆல்வாவின் வேண்டுகோளுக்கிணங்கத்தான் சிவராசனுக்கு பெங்களூரில் வீட்டை வாடகைக்குக் கொடுத்ததாக ரெங்கநாதன் வாக்குமூலம் அளித்தார். இதில் உண்மை உண்டா என்பதை விசாரித்தார்களா?

41. சந்திரா சுவாமி, சுப்பிரமணிய சுவாமி, சந்திரசேகர், ஆயுத விற்பனையாளர் கசோகி மூவருக்கும் இந்த வழக்கில் ஏதாவது தொடர்பு உண்டா என்கிற கோணத்தில் விசாரணை நடந்ததா?

42. புலிகள் இந்தக் கொலையை செய்ததின் மூலம் அவர்களுக்குக் கிடைத்த ஆதாயம் என்ன? அமெரிக்கா போன்ற மிகப் பெரிய வல்லரசுகள், சி.ஐ.ஏ. மூலமாக, ஏராளமான ஆயுத உதவிகளும் செய்து இந்தக் காரியத்தை செய்ய வைத்தார்களா?

43. யாரோ சிலரைப் பிடித்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய சி.பி.ஐ.யும், விசேஷ புலனாய்வுத் துறையும் எதற்கு? தீர்ப்பு விரைவில் வெளிவரப் போகிறது. குறிப்பாக ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையைத் தொடர்ந்து சட்ட வல்லுநர்கள் இந்தத் தீர்ப்பை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் இப்படி பல கேள்விகள் சிறப்பு புலனாய்வுத் துறையின் விசாரணையைப் பற்றி எழுந்திருக்கிறது. கேள்விகள் எல்லாம் உண்மைகள் ஆகிவிடாது. ஆனால் பல சந்தேகங்கள் களையப்படாவிட்டால் உண்மைக் குற்றவாளிகள் பலம் வாய்ந்த சக்திகளுக்குப் பின்னால் ஒழிந்து கொண்டு விடுவார்கள். மறைந்து நிற்கும் அவர்களால் பலம் வாய்ந்த இந்திய தலைவக்களுக்குத் தான் ஆபத்து. விசேஷப் புலனாய்வுத் துறை விசாரித்ததா, அல்லது வெறும் விசாரணை அறிக்கை தயார் செய்ததா?" என்கிற பில்லியன் டாலர் கேள்விக்கான விடை நிச்சயம் ஒவ்வொரு இந்தியனுக்கும் தெரியவேண்டும்

(நவம்பர் 19, 1997-ல் தமிழன் எக்ஸ்பிரசில் சுதாங்கன் எழுப்பிய கேள்விகளுக்கு இதுவரை பதில் இல்லை)